RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s222718

OPEN ACCESS

# கூட்டுக் குஞ்சுகள் நாவலில் இராஜம் கிருஷ்ணனின் செல்நெறிகள்

து. ஸ்ரீபாரத்ப்ரியா [அ, *], மோ. ரூபா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Rajam Krishnan's novel Kootu Kunjugal

D. Sri Bharath Priya [a, *], M. Rooba [a]

[a] PG Tamil & Research Department, Chellammal Womens College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: bharathinaban@gmail.com

Received: 22-09-2022
Revised: 13-11-2022
Accepted: 19-11-2022
Published: 05-12-2022

Check for updates

## ABSTRACT

Rajam Krishnan's novels mostly deal with family, society, poverty and economics, caste related issues and about child labour. Novelist Rajam Krishnan would plan the theme foor a novel in advance and travel to the relevant places and stay there to find out the life of the people and writes the novel based on his experience This is his specialty. In the novel Kootu Kunjugal he talks about child labour. He has created a story centering on tribulations. The novel depicts the condition of people who send their children to the matchbox and firecracker factory to fill their stomachs when agriculture is stopped in a dry land because of lack of water and rain. Golam who went to work in a factory at an early age, got sick and Viji, the boss's wife who protests, fo all this things and leaves her husband. In this novel, Rajam Krishnan has said whether in present or past till the poverty did not get vanished child labour also will not come to an end.

**Keywords:** Child Labor, Poverty, Education, Distress, Factory

## முன்னுரை

1979 ஆம் ஆண்டு உலகச் சிறுவர் ஆண்டாக கொண்டாடப் பெற்றது. நம் நாட்டில் அரசைச் சார்ந்ததும், தனிப்பட்ட முறையிலும் சிறுவர் நல வளர்ச்சிக்கானப் பல திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அத்தகையக் குழுக்களில் தீட்டப்படுகின்ற திட்டங்கள் குழந்தைகளைச் சரியாக சென்றடைகிறதா என்பது கேள்விக்குறியே. இராஜம் கிருஷ்ணனின் நாவல்களில் பெரும்பாலும் குடும்பம், சமூகம், வறுமை, பொருளாதாரச் சிக்கல்கள், சாதியப் பிரச்சனைகள், குழந்தை தொழிலாளர் என பல கோணங்களில் அவர் கதாபாத்திரங்களின் தன்மையை வெளிப்படுத்துவார்.

நாவலாசிரியர் இராஜம் கிருஷ்ணன் அவர்கள் ஒரு நாவலுக்கான பொருளை முன்னமே திட்டமிட்டு சம்பந்தப்பட்ட இடங்களில் பிரயாணம் செய்து மக்களின் வாழ்வை கண்டறிய அங்கேயே தங்கி நாவலை எழுதுவார். இதுவே இவரது தனிச்சிறப்பாகும். கூட்டுக் குஞ்சுகள் என்ற நாவலில் குழந்தை தொழிலாளர்களுக்கு ஏற்படும் இன்னல்களை மையப்படுத்தி கதைக்களம் உருவாக்கியுள்ளார். குழந்தை தொழிலாளர் என்னும் உலகம் அரை வயிற்று கஞ்சிக்காகவும் தன் பிணிப்போக்க மருந்துக்காகவும் போராடிக் கொண்டிருக்கும் வாழ்க்கையைப் படம் பிடித்தாற்போல் வரைந்திருக்கும் நாவலாசிரியர் திருமதி இராஜம் கிருஷ்ணனின் கூட்டுக் குஞ்சுகள் என்ற நாவல் இங்கு ஆய்வுக்காக நோக்கப்படுகிறது.

## சமூகப் பார்வை

“சின்னப்பட்டி மக்கள் முக்கால் வாசிப்பேரும், பெரியபட்டிக்காரர்களையும் கூட மங்கலத்துப் பெரிய தனக்காரர்களையும் அண்டி வாழும் அரிசன மக்கள்” இவ்வாறாக விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையைத் தெள்ளத் தெளிவாக படம் பிடித்துக் காட்டுவது போல் அவர்களுடைய சமூக அவலங்களை நம் கண் முன் கொண்டு வந்து சேர்க்கிறார் (Rajam Krishnan, 2011).

சிவகாசிப் பகுதியில் தீப்பெட்டி தொழிற்சாலையில் வாடும் குழந்தைகளின் வாழ்வை முன்வைத்து இவரால் கற்பனையாக புனையப்பட்ட நாவல் தான் ‘கூட்டுக் குஞ்சுகள்’. பட்டாம்பூச்சிகளாய் புத்தகப்பைக் கொண்டு பறக்க வேண்டிய குழந்தைகள் இளைய சேரன் வெளிச்சம் காட்டும் குழல் விளக்கின் முன் பறக்கும் பூச்சிகளைப் போல் பொட்டுப் பொடிசுகளாய்க் குழந்தைகள் வந்து நிற்கின்றனர். அவசர அவசரமாய் குழந்தைகளை பேருந்தில் ஏற்றத் துடிக்கும் இரத்தினம் என்கிற ஏஜென்ட்.

“அழுக்கு கிழிசல்கள், தோள்பட்டை நழுவும் கவுன்கள், பாவாடைகள், பிரிந்து விழும் முடிகள், உலகத்து சிருஷ்டி ரகசியங்கள் புரிந்து விட்டதால் ஏற்பட்ட நாண முகிழ்ப்புகளின் அடங்கிவிட்ட சுவடில்லா முகங்கள்” என ஆசிரியர் குழந்தைகளின் களைப்பையும் உழைப்பையும் சுட்டிக்காட்டியுள்ளார். காலை மூன்றரை மணிக்கு துவங்கி பதிமூன்று, பதினாலு மணிநேர வேலை அச்சிறுவர், சிறுமியருக்கு இவர்களை காப்பாற்ற வந்த தேவதையாக விஜி. விஜி மட்டும்தான் இவர்களை மீட்டெடுக்க முன்வருகிறாள். அந்த ஊரில் வேலைக்கு வரும் வெள்ளை வேட்டியும், அரக்கைச் சட்டையும், மேல் ஒரு துண்டுமாக ஒல்லியும் சுமாரான உயரமும் கொண்ட வாத்தியார் விஜிக்கு புதியவர் அல்ல (Rajam Krishnan, 2011).

## குடும்பம்

நாவலாசிரியர் இராஜம் கிருஷ்ணன் அவர்கள் குடும்ப உறவுகளைப் பற்றி எழுதுவதில் மிகவும் கைதேர்ந்தவர். குறிப்பாக பெண்களைப் பற்றி அவர் எழுதும் விதமும் பெண்மையைப் போற்றும் விதமும் சிறப்பானது. பெண் கதாபாத்திரத்தை அவருடைய கோணத்தில் தைரியம் மிகுந்தவளாகவும், தன்னம்பிக்கையை உடையவளாகவும் அநீதியை எதிர்ப்பவளாகவும் அவர் அமைத்திருப்பார். கூட்டுக் குஞ்சுகள் நாவலில் விஜி என்ற கதாபாத்திரத்தை தைரியம், தன்னம்பிக்கை உடைய பெண்ணாக அவர் வடிவமைத்திருப்பார்.

‘பெண் குரல்’ என்னும் நாவலில் ஆசிரியர் இடைத்தர குடும்பத்தில் பிறந்த பெண் உயர்வான குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு பல வகையான கஷ்டங்களையும் சங்கடங்களையும் அனுபவித்த பெண் ஒருத்தியின் குரலாக அவர் பதிவு செய்துள்ளார். இந்நாவலில் விஜி என்ற கதாபாத்திரம் சமூக அநீதியைக் கண்டு போராடி குழந்தைகளின் நலனுக்காக தன் கணவனையே எதிர்க்கத் துணிந்த பெண் போராளியாகப் படைத்துள்ளார்

## கள ஆய்வு

நாவலாசிரியர் ஒரு குறிப்பிட்ட களத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அங்குச் சென்று கள ஆய்வு நிகழ்த்தியோ அம்மக்களுடன் சிறிது காலம் வாழ்ந்தோ கதைக்கு உண்டான கருவை சேகரிப்பதில் முதன்மையான இடம் தமிழ் நாவலாசிரியர்களில் இராஜம் கிருஷ்ணன் குறிப்பிடத்தக்கவர். இவர் ஒரு நாவலுக்கான பொருளை முன்னே திட்டமிட்டு சம்பந்தப்பட்ட இடங்களில் பிரயாணம் செய்து மக்களின் வாழ்வை கண்டறிய அங்கேயேத் தங்கி நாவல் எழுதுவதே இவரது தனிச்சிறப்பாகும்.

குழந்தைத் தொழிலாளர்கள் எப்படி உருவாகிறார்கள்? ஏன்? எதற்கு? என்பதற்கெல்லாம் விடை காணும் விதமாக இந்நூலை அவர் படைத்துள்ளார். வறுமை என்பது நம் மண்ணில் அன்றைக்கும் சரி

இன்றைக்கும் சரி இல்லாமல் இல்லை. இதற்கு குழந்தைகள் பலியாக வேண்டுமா என்ற சந்தேகமே இந்நூலை அவர் எழுதுவதற்கு காரணமாக அமைந்திருக்க கூடும்.

## கம்யூனிஸம் (பொதுவுடமை)

பொதுவுடமை பெயர் தான் கம்யூனிஸம். அந்த வெளிச்சம் எப்போது பூமியில் வந்ததோ அன்றைக்கே முதலாளித்துவ சுரண்டல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தொழிலாளர்களின் கோரிக்கைகள் யாவும் உயிர் பெற தொடங்கின. உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் புதிய சரித்திரம் ஒன்று எழுதப்பட்டது. அப்புரட்சியின் வெளிப்பாடே இன்று அனைத்து தொழிலாளர் முகங்களிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது என்பது உண்மை.

கூட்டுக்குஞ்சுகள் என்ற நாவலில் விஜி என்ற கதாபாத்திரம் பொதுவுடமையை எடுத்துக் கூறுகிறது. அவள் தீப்பெட்டி தொழிற்சாலை பணிபுரியும் குழந்தைகளின் நலனுக்காக தன் வாழ்வை இழந்தும் போராடுகிறாள்.

“கருப்பு பாடி பனியன், கம்பித்தூக்கில் டீ வாங்கிச் செல்லும் பிள்ளை, கை வண்டிகளில் தார்கட்டோ, தீப்பெட்டி அட்டை குச்சிகளோ தள்ளிச் செல்பவர், தண்ணீர் தூக்கி செல்பவர் என்று எத்தனையோ பிள்ளைகள் இவர்களுக்காகப் போராடும் விஜி.” (இராஜம் கிருஷ்ணன், ப.எண்.145)

## சமூகப் போராளிகள்

புதுக்கவிதையில் புது விதை விதைத்த பெருமைக்குரியவர் கவிக்கோ அப்துல் ரகுமான். அவரும் குழந்தை தொழிலாளர் என்னும் சமுதாயக் குறையைத் தம் கவிதை மூலம் சாடியுள்ளார்.

“வருடம் தவறாமல்

குழந்தைகள் தினத்தைக்

கொண்டாடுகிறவர்களே!

தினங்களைக் கொண்டாடுவதை

விட்டுவிட்டுக்

குழந்தைகளை எப்போது

கொண்டாடப் போகிறீர்கள்?”

என்ற கவிதையில் அவர் பதிவு செய்கிறார்.

## கைலாஷ் சத்யார்த்தி

அன்னை தெரசாவிற்கு அடுத்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற இந்தியர் கைலாஷ் சத்யார்த்தி. இவர் சிறுவயதில் தினமும் பள்ளிக்கூடம் செல்லும் போது சாலையோர ஒரு சிறுவனை காண்பார். அவன் தன் தந்தையோடு அமர்ந்து வேலை செய்து கொண்டு இருப்பான். ஏன் அந்த சிறுவன் தன்னைப்போல் பள்ளிக்கு வரவில்லை? என்ற கேள்வி அவர் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. தம் ஆசிரியரிடமும் பெற்றோரிடமும் இக்கேள்வியைக் கேட்டார்.

பணமில்லாததால் அவன் பள்ளிக்கு வரவில்லை. வீட்டின் உணவுத் தேவையை நிறைவு செய்ய பணம் வேண்டும் எனவே அவன் பணம் ஈட்ட வேலை பார்க்கிறான் என்ற பதில் கிடைத்தது. அந்த பதில் அவருக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. அவருடைய மனிதநேயம் பிற்காலத்தில் அவரை பள்ளிச் செல்லாத குழந்தைகள் மேல் பரிவுக் கொள்ள வைத்தது. அதற்காக அவர் “குழந்தைகள் பாதுகாப்போம்” என்னும் இயக்கத்தை தொடங்கினார்.

அந்த இயக்கத்தின் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க பாடுபட்டு வருகிறார். கடந்த முப்பது ஆண்டுகளில் எண்பத்தாறாயிரம் குழந்தைத் தொழிலாளர்களை மீட்டுள்ளார். உலகக் குழந்தைகள் கல்வி உரிமைக்காக 103-நாடுகளில் 80,000 கிலோ மீட்டர் தூரம் நடைப்பயணம் செய்துள்ளார். குழந்தைகளின் கல்வி உரிமைக்காக நாடு கடந்து பரப்புரையாற்றி வருகிறார்.

குழந்தை தொழிலாளர்களை மீட்டெடுக்க தன் எழுத்துக்களின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்திய நாவலாசிரியர் இராஜம் கிருஷ்ணனின் தைரியம் பாராட்டுக்குரியது. இவருடைய ஒரே குறிக்கோள் குழந்தைகள் கல்வி கற்க வேண்டும் என்பதே.

“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு

எழுமையும் ஏமாப்பு உடைத்து” (Palanidhasan, 2017)

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பான கல்வியைச் சிறுவர் சிறுமியர் கற்க வேண்டும் என்பதே இவருடைய நோக்கமாகும்.

## முடிவுரை

இலக்கியப் படைப்புகள் வாசகர் மனங்களை ஈர்த்து ஒருமுகப்படுத்தி வாழ்வின் பிரச்சனைகளை எதிர் நோக்கும் துணிவையும் சுயநலமற்ற மனிதாபிமான நம்பிக்கையையும் ஊட்ட வல்லவையாக அமையும் போது தான் இலக்கியம் பயனுடையதாகிறது. கூட்டுக் குஞ்சுகள் நாவலில் சமுதாயத்தின் பின் தங்கிய பகுதிகளின் பிரச்சனைகளை பற்றியும் சிறுவர்களின் நிலை பற்றியும் தெள்ளத்தெளிவாக ஆசிரியர் கூறியுள்ளார். குழந்தைகள் உலகம் அழகானது அவற்றை கல்வியால் மட்டுமே அலங்கரிக்க முடியும் என்ற உண்மையை நாவலின் வாயிலாக இந்நூலில் ஆசிரியர் கூறியுள்ளார்.

## References


Palanidhasan, (2017) Thirukkural, Kalaa Offset Printers, Sivakasi, India

Rajam Krishnan, (2011) Kootu Kunjukal, New Century Book House, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License